பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 14 | சனிக்கிழமை | 30.08.2025 | அதிர்வு 29

## சர்வதேச நீதி வேண்டி வடக்கு, கிழக்கில் இன்று மாபெரும் போராட்டங்கள்

(எஸ்.நிதர்ஷன்)

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு இன்று சனிக்கிழமை வடக்கு, கிழக்கு 06▶



# மேலும் 10 மனித எலும்புக்கூடுகள் செம்மணியில் நேற்று அடையாளம்

## 2 என்புத் தொகுதிகள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவாறு கண்டுபிடிப்பு




(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

**யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றைய அகழ்வின் போது புதிதாக 10 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் மூலம் செம்மணி மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 187ஆக அதிகரித்துள்ளது.** 06▶






தெற்கு அரசியலில் அதிக ஈடுபாடு காட்டி வரும் சட்டத்தரணி ஒருவருடன் கொழும்பில் உரையாடிய போது அவர் ஒரு விடயத்தை விளக்கினார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீது அரச சொத்தைச் சூறையாடிய குற்றச்சாட்டைச் சுமத்தி இருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசு, 'சட்டத்தின் முன் அனைவரும் சமம். எல்லோருக்கும் சட்டம் ஒரே மாதிரியாக நடைமுறைப்படுத்தப்படும்' என்று இந்தக் கைது நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்கு விளக்கம் கூறி வருகிறது என்பதை அவர் சுட்டிக் காட்டினார்.

அது சரியானது என்றால், அதே சட்டத்தின் அடிப்படையில் இன்னொரு விடயத்தையும் அவர் தெளிவுபடுத்தினார்.

அது – அரச சொத்தை ஜனாதிபதி ரணில் சூறையாடியமை தொடர்பில் ஒரு கோடி 66 லட்சம் ரூபா அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக தேசிய மக்கள் சக்தி அரசினர் கூறுகின்றனர். அந்தத் தொகை ஒரு கோடி ரூபாவாக இருந்தாலும், 06▶

# செம்மணியில் நேற்றைய அகழ்வுப் பணி

(படங்கள்:- பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)















# அரச காணிகளை அடையாளம் காணும் ஆய்வு நடவடிக்கைகள் ஆரம்பமாகின

முதலீட்டுக்கான அரச காணிகளை அடையாளம் காண்பதற்கான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலக மட்டத்தில் இந்த ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக காணி ஆணையாளர் நாயகம் சந்தன ரணவீரஆரச்சி தெரிவித்தார்.

மேற்படி காணிகளை முதலீட்டாளர்களின் தேவைக்கேற்ப விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் கூறினார்.

மகாவலி வலயங்களின் 5,300 ஹெக்டேயர் காணியை முதலீட்டுக்காக ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எச்.எம்.ஜே.கே. ஹேரத் குறிப்பிட்டார்.

# மருத்துவ பீடங்களின் வசதிகளை மேம்படுத்த புதிய வேலைத்திட்டம்



பல்கலைக்கழக மருத்துவ பீடங்களின் வசதிகளை மேம்படுத்த புதிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்தது.

சப்ரகமுவ, மொரட்டுவ, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்களில் வசதிகளை மேம்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதாக கல்வி பிரதி அமைச்சர் மதுர செனெவிரத்ன தெரிவித்தார்.

நாட்டில் தற்போது 12 மருத்துவ பீடங்கள் செயற்படுகின்றன.

இவற்றில் வருடாந்தம் 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர்.

# அனைத்து அரச நிறுவனங்களிலும் கைவிரல் அடையாள இயந்திரங்கள்




அனைத்து அரச நிறுவனங்களிலும் கைவிரல் அடையாள பதிவு இயந்திரத்தை நிறுவ நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு தெரிவிக்கின்றது.

ஏற்கனவே பிரதேச செயலக அலுவலகங்கள் உள்ளிட்ட பல்வேறு அரச நிறுவனங்களிலும் கைவிரல் அடையாள பதிவு இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளதாக அமைச்சர் கலாநிதி சந்தன அபேரத்ன குறிப்பிட்டார்.

ஊழியர்களின் வருகை மற்றும் வெளியேறும் நேரங்களை பட்டியலிடுவது இதன் பிரதான நோக்கமாகும்.

இதற்கு மேலதிகமாக கடமைக்கு சமூகமளிப்பதில் காணப்படும் முறைகேடுகளை தடுப்பது இதன் மற்றுமொரு நோக்கம் என அமைச்சர் சந்தன அபேரத்ன மேலும் கூறினார்.



# தேயிலை உற்பத்தி வீழ்ச்சி உற்பத்தியாளர்கள் கவலை

கடந்த ஒரு வருடமாக நாட்டில் தேயிலை உற்பத்தி குறைந்துள்ளதாக தேயிலை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவிக்கின்றது.

இதன் பிரகாரம் கடந்த வாரம் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 5.1 மில்லியன் கிலோகிராம் ஆகும்.

3 மாதங்களுக்கு முன்னர் வாரமொன்றிற்கு சுமார் 6 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது.

வரட்சி மற்றும் வளர்ச்சி குன்றியதால் அறுவடை குறைந்துள்ளதாக தேயிலை உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# அரச ஊழியர்களின் ஓய்வூதிய தொகை ஒக்டோபர் இறுதிக்குள் வழங்கப்படும்



அரச ஊழியர்களின் ஓய்வூதிய நிலுவைத் தொகை ஒக்டோபர் மாத இறுதிக்குள் வழங்கப்படும் என ஓய்வூதிய திணைக்களம் தெரிவித்துள்ளது.

சைபர் தாக்குதலின் பின்னர் அரச ஊழியர்களின் தரவுக் கட்டமைப்பில் ஏற்பட்ட தொழிநுட்ப கோளாறு காரணமாக, சுமார் 04 மாதங்களாக சில அரச ஊழியர்களுக்கு ஓய்வூதிய கொடுப்பனவைமுழுமையாக செலுத்த முடியாமல் போயுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சாமிந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இந்த வருடம் ஓய்வு பெற்ற மிகச் சிலர் எவ்வித ஓய்வூதியக் கொடுப்பனவையும் பெற்றுக்கொள்ளவில்லை எனவும் அவர் கூறினார்.

# அர்ஜுன மகேந்திரனை அழைத்துவர நடவடிக்கை

மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் நேரடியாக தொடர்புபட்டிருக்கும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை சிங்கப்பூரில் இருந்து நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயம் மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் லால் காந்த இதனைத் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தற்போது நாட்டில் அரசாங்கத்திற்கு மேலாக ஒரு அரசு செயற்படுகிறது.

அத்துடன் குற்றங்களுக்கான ஒரு அரசும் செயற்படுகிறது. அந்த குற்றங்களுக்கான அரசை இல்லாமல் செய்ய வேண்டும்.

இந்தநிலையில் அதற்கான செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதில் ஒரு அங்கமே இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவின் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.



இலங்கை நாட்டுக்கு எதிராகக் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் அவர்களுக்கான தண்டனை வழங்கப்படும்.

அவ்வாறே முன்னாள் ஜனாதிபதி ரணிலின் நண்பரான சிங்கப்பூரில் இருக்கும் அர்ஜுன மகேந்திரனும் கைது செய்து அழைத்து வரப்படுவார்.” என்று தெரிவித்தார்.

# மக்களினதும், போராளிகளினதும் தியாகம்தான் ஐ.நா. சபையினுடைய கதவைத் தட்டி நிற்கிறது

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கருத்து



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

எமது இனத்தை அழித்தவர்கள், உறவுகளை காணாமல் ஆக்கியவர்கள், இனத்தை இல்லாது செய்கின்ற சிந்தனையுடன் உள்ளவர்கள் அத்தகைய விடயங்கள் தொடர்பான விசாரணையை முன்னெடுக்க அருகதையற்றவர்கள் என்பதை நாங்கள் உணர்ந்தவர்களாக இருக்கிறோம் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

செம்மணி உள்ளடங்கலாக இலங்கையில் வடக்கு,கிழக்கு மாகாணங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மனித புதைகுழிகளுக்கும், நடைபெற்ற இனப்படுகொலைகளுக்கும் சர்வதேச நீதி கோரி கையெழுத்துப் போராட்டம் தமிழ் தேசிய கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை மன்னார் நகர பஸ் தரிப்பிடத்தில் இடம் பெற்றது.

இதன் போது தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐ.நா சபையினுடைய கதவை தட்டியது மக்களினதும், போராளிகளினதும் தியாகம் என்பதை நாம் ஒரு ஒருபோதும் மறந்து விட முடியாது.

இன்று வடக்கு கிழக்கில் எங்கு தோண்டினாலும் தமிழர்களுடைய மனித எலும்புக்கூடுகள் வெளி வருகின்றன. வடக்கு – கிழக்கில் பல்வேறு இடங்களில் மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்றன.

முதல் முறையாக மனித எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டது மன்னாரிலேயே. அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் மனிதப் புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டது. தற்போது யாழ்ப்பாணத்தில் கூடுதலான மனித எலும்புக் கூடுகள் உள்ள மனிதப் புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தாயை தனது பிள்ளை கட்டிப்பிடித்துக் கொண்டு காணப்படுகின்ற எலும்புக்கூட்டு தொகுதியும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த மனித எலும்புக்கூடுகளைப் பார்க்கின்ற போது வேதனை ஏற்படுத்துகிறது.

மனித உரிமை மீறல் சம்பந்தமாக செயல்பட்டவர்களை தண்டிக்கும் வகையில் சர்வதேச நீதிமன்றத்தில் அவர்களுக்குத் தண்டனை வழங்குகின்ற நிலைப்பாட்டை கொண்டு வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகின்ற வகையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன.

மன்னார் மறைமாவட்டத்தின் முன்னைநாள் ஆயர் அமரர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை ஏற்கனவே கூறியபடி இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களின் உண்மை எண்ணிக்கை ஐ.நா. சபை வரை சென்றுள்ளது.

இன்று வரை அவர் குறிப்பிட்ட எண்ணிக்கையே அங்கும் உள்ளது. அவ்வாறான ஒரு சூழலில் ஆயர் அவர்கள் கூறிய வார்த்தை "கள்ளர்கள் கள்ளர்களை விசாரணை செய்ய முடியாது என்றது போல எங்களுடைய இனத்தை அழித்தவர்கள், எமது உறவுகளைக் காணாமல் ஆக்கியவர்கள், இனத்தை இல்லாது செய்கின்ற சிந்தனையுடன் உள்ளவர்கள் அவ்விடயங்கள் தொடர்பான விசாரணையை முன்னெடுக்க அருகதையற்றவர்கள் என்பதை நாங்கள் உணர்ந்தவர்களாக இருக்கிறோம்.

இந்த கையெழுத்து வேட்டை ஐ.நா. வரைக்கும் சென்று எமக்கு நீதியாக மாற வேண்டும். எம் உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்தக் கையெழுத்து வேட்டையை ஆரம்பித்துள்ளோம். வடக்கில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை குறித்த கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் பிறிதொரு தினத்தில் இடம் பெறும். பல ஆயிரக்கணக்கான கையெழுத்துக்களை பெற்றுக் கொள்வதன் மூலம் எமது இலக்கை அடைய முடியும். இதனூடாகவே எமது கோரிக்கையை சர்வதேசத்திற்கு தெரிவிக்க முடியும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கையெழுத்து போராட்டத்தில் அருட் தந்தையர்கள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள். பொது மக்கள், மனித உரிமை செயல்பாட்டாளர்கள் உள்ளடங்கலாக பலர் கலந்து கொண்டு கையெழுத்திட்டமை குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஒரு லட்சம் ரூபாவாக இருந்தாலும், பத்தாயிரம் ரூபாவாக இருந்தாலும், குற்றம் தான். எப்படி சட்டத்தின் முன் எல்லோரும் சமனோ, அதே போல அரச சொத்தை சூறையாடிய விடயத்திலும் தொகை மாறுபட்டாலும் குற்றம் குற்றம்தான். அந்த வகையில் பார்த்தால் உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயம் ஒன்றுக்கு இடையே தனிப்பட்ட பயணமாக பிரிட்டனில் தரையிறங்கி ஒரு நாளை செலவிட்டு வந்தமைக்கான செலவினம் அரச சொத்தை துஷ்பிரயோகம் செய்த விடயமாகும் என்றால், தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும் தன்னுடைய தனிப்பட்ட தேவைகளுக்காக அரச வாகனத்தில் – அரச படையினரின் பாதுகாப்போடு – பல இடங்களுக்கும் சென்று வருவதும் அரச சொத்தை சூறையாடிய விடயம்தான். சில சமயங்களில் பிரிட்டனுக்கு ரணில் விக்கிரமசிங்க போய் வந்ததால் ஏற்பட்டமை போன்று ஒரு கோடி 66 லட்சம் ரூபா செலவு ஒரே சமயத்தில் ஏற்படாவிட்டாலும், நாட்டுக்குள் பல்வேறு இடங்களுக்கும், தமது கட்சியின் கூட்டங்களுக்காகவும், தமது தாயாரை சந்திக்கவும், பிற தனிப்பட்ட விடயங்களுக்காகவும் இப்போது அநுரகுமார திஸநாயக்க அரச வாகனம் அல்லாத தமது தனிப்பட்ட வாகனங்களில் பயணிப்பதில்லை. அவருக்கு அத்தகைய சமயங்களில் அரச பாதுகாப்பு பிரிவினர் பெரும் செலவில் பாதுகாப்பு அளிக்காமல் விடுவதில்லை. அப்படிப் பார்த்தால் இப்போது அநுரகுமார திஸநாயக்கவும் தன்னுடைய தனிப்பட்ட பயணங்களுக்காக ஒவ்வொரு சமயமும் பல லட்சம் ரூபா அரச சொத்துகளை துஷ்பிரயோகம் செய்து கொண்டுதான் இருக்கின்றார். சட்டம் எல்லோருக்கும் சமம் என்றால், அது அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதி பதவியை விட்டு கீழ இறங்கியதும் இவ்விடயங்களுக்காக அடுத்த நாள் அவர் மீதும் அந்தச் சட்டம் பாய வேண்டி இருக்கும் என்று அந்தச் சட்டத்தரணி தெளிவு படுத்தினார்.

எனக்குஎன்னவோஅவர்கூறியவற்றில் நீதி, நியாயம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

ஆக, இப்போதைய எதிர்க்கட்சியினர் இப்படி ஜனாதிபதி தினசரி அல்லது அவ்வப்போது தன்னுடைய தனிப்பட்ட பயணங்களுக்காக சென்று வரும் போது ஏற்படும் அரச போக்குவரத்து செலவினங்கள் மற்றும் பாதுகாப்பு தரப்பினருக்கான செலவினங்கள் போன்றவற்றை இப்போதே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பித்து விவரமாக விடயங்களை பெற்றுக் கொள்வது நல்லது. அப்போதுதான் அநுரகுமார திஸநாயக்கவின் பதவிக் காலம் முடிவடையும்போது அரச சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டுக்காக, அவரது அரசு இப்போது செய்யும் வியாக்கியானத்தின் அடிப்படையில், அவருக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்து, இப்போது ரணிலுக்குச் செய்தமை போல விடயங்களை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

\+ \+ \+

மண்டைதீவுப் பக்கத்தில் சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு அரங்கம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகளுக்கு அடிக்கல் நாட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நாளை மறுதினம் யாழ்ப்பாணம் வருகிறார்.

2016 – 17 காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மாவட்ட கிரிக்கெட் சங்கத்துக்குத் தலைவராக இருந்த கந்தையா தர்மகுலசிங்கம் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினார். யாழ்ப்பாணத்தில் 'கோல்டன் ஈகிள் பாதுகாப்பு நிறுவனத்தை' வெற்றிகரமாக இயக்கிவரும் அவர் யாழ் மாவட்டக் கிரிக்கெட் சங்க தலைவராக இருந்த சமயத்தில் – 8,9 வருடங்களுக்கு முன்னர் – இதே மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் அரங்கு ஒன்றை அமைப்பதற்கான முன் முயற்சிகள் எடுக்கப்பட்டமையை நினைவூட்டினார். அச்சமயத்தில் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைவராகவும் நாட்டின் பிரதிச் சபாநாயகராகவும் இருந்த திலங்க சுமதிபால யாழ்ப்பாணம் மாவட்டக் கிரிக்கெட் சங்கத்தின் ஆதரவுடன் யாழ்ப்பாணத்தில் ஒரு சர்வதேச கிரிக்கெட் அரங்கை அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தார். அதற்காகப் பொருத்தமான இடங்களை நேரடியாகப் பார்வையிட அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்தார். அவரும், இந்த விடயத்தோடு தொடர்புடைய நிபுணர்களும், இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் ஏனைய நிர்வாகிகளும் யாழ் மாவட்ட கிரிக்கெட் சங்கத்துடன் இணைந்து பல இடங்களையும் பார்வையிட்ட பின்னர், மண்டைதீவைப் பொருத்தமான இடமாகத் தீர்மானித்தனர். ஆனால் அச்சமயத்தில் வடக்கு மாகாண சபை நிர்வாகத்தை முன்னெடுத்த நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையிலான தரப்பு மண்டைதீவில் கிரிக்கெட் அரங்கு அமைப்பதற்கு தேவையான அளவு நிலத்தை தருவதற்கு இணங்கவில்லை. அப்பகுதியில் உல்லாசப் பயணத்துறை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பெரும் நிலப்பரப்பு தேவைப்படுவதால், கிரிக்கெட் அரங்கு அமைப்பதற்கும் அதை ஒட்டிய பிற கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்கும் தேவையான நிலத்தை வழங்க முடியாது என மாகாண சபை பின்னடித்தது. அதனால் அந்தத் திட்டம் அப்போது முன்னெடுக்கப்படாமல் தள்ளிப் போனது. கடைசியில் இப்போதாவது அதே இடத்தில் கிரிக்கெட் அரங்கை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அப்பணி விரைந்து – தாமதிக்கப்படாமல் – முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார் – அவர்.

பலாலி விமான நிலையத்தை விஸ்தரிப்பது உட்பட இது போன்ற பல விடயங்களில் நமது மாகாண சபை அதன் ஆரம்ப காலத்தில் முட்டுக்கட்டைகளைப் போட்டு குழப்பங்களை ஏற்படுத்தியது என்பது மறுக்க முடியாததுதான்.

\+ \+ \+

கடந்த தசாப்தத்தில் சர்வதேச ரீதியில் பரபரப்பை ஏற்படுத்திய விடயங்களில் ஒன்று விக்கிலீக்ஸ். அந்த விவகாரத்தை ஒட்டி இலங்கையைச் சம்பந்தப்படுத்தி வெளியான சில விவரங்களைக் குறிப்பிட்டு செய்தி பிரசுரித்தமைக்காக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' நாளிதழுக்கு எதிராக ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இரண்டு வழக்குகளை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் தொடுத்திருந்தார். விக்கிலீக்ஸ் கேபிள்களில் டக்ளஸ் தேவானந்தா குறித்து வந்த விடயங்களை 'உதயன்' நாளிதழ் பிரசுரித்தமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அந்த இரண்டு வழக்குகளில் இரண்டாவது வழக்கும் நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வந்திருக்கிறது.

'உதயன்' நாளிதழுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட பல்வேறு வழக்குகளுக்காக அந்த நிறுவனத்தின் சார்பில் நீதிமன்றங்களில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன், நேற்றைய வழக்கோடு ஐந்து வழக்குகளை அந்த நிறுவனத்துக்கு வெற்றிகரமாக முடித்துக் கொடுத்திருக்கிறார்.

'உதயன்' நாளிதழ் தொடர்பான வழக்குகளைத் தான் இலவசமாக நடத்தித் தருவார் என்ற வாக்குறுதியோடு பொறுப்பெடுத்த காரணத்தினால், நீதிமன்றுக்குத் தான் கொழும்பிலிருந்து வந்து போவதற்கான செலவை கூட பெற்றுக் கொள்ளாமல், இலவசமாக அந்த வழக்குகளை அவர் நடத்திக் கொடுத்திருக்கிறார். ஆனாலும் அந்த நிறுவனம் அந்த விடயத்தில் அவருக்கு நன்றியுடன் நடந்து கொண்டதா என்பதை யாழ்ப்பாண வாசகர்களே நன்கு அறிவார்கள். அவர்களின் கவனிப்புக்கு இத்தகவலை முன் வைக்கிறேன்.

---

## சர்வதேச நீதி வேண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மாகாணங்களில் பெரும் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டோருக்குச் சர்வதேச நீதி கோரி வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கில் இன்று காலை 10 மணியளவில் இந்தப் போராட்டங்கள் இடம்பெறவுள்ளன.

வடக்கில் யாழ்ப்பாணம் – கிட்டு பூங்கா முன்றலில் அணிதிரளும் போராட்டக்காரர்கள், அங்கிருந்து செம்மணி வரையும் பேரணியாகச் செல்லவுள்ளனர்.

அதேபோல் கிழக்கில் மட்டக்களப்பு – கல்லடிப் பாலத்தில் அணிதிரளும் போராட்டக்காரர்கள், அங்கிருந்து காந்தி பூங்கா வரையும் பேரணியாகச் செல்லவுள்ளனர்.

பொது அமைப்புக்களும், தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள ஒட்டுமொத்த தமிழ்க் கட்சிகளும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டங்களுக்குத் தமது முழுமையான ஆதரவை வழங்கியுள்ளதுடன் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளன.

---

## மேலும் 10 மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 37ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது 10 மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் மூலம் செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள மனித என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 187ஆக அதிகரித்துள்ளது.

மேலும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 10 மனித என்புத் தொகுதிகள் நேற்று முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் செம்மணி புதைகுழியில் இருந்து இதுவரை 174 மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

நேற்று இரண்டு என்புத் தொகுதிகள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவாறு அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேலும் அகழ்வாய்வுத்தளம் ஒன்றில் இருந்து பிளாஸ்டிக் காப்பு ஒன்று உடைந்த நிலையில் அகழ்ந்து எடுக்கப்பட்ட நிலையில் சான்றுப் பொருளாக நீதிமன்றக் கட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளது.






# ஜனாதிபதி மாளிகையை சுற்றுலா விடுதியாக மாற்றுவதற்கான முதலீடுகளை செய்யுங்கள்

## ஜனாதிபதி பணிப்புரை

சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ள தனியார் துறை தரப்பினர்களுடன் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடல் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

2026 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறையில் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைய வெறும் ஊக்குவிப்புத் திட்டங்கள் மட்டும் போதாது என்றும், அரச மற்றும் தனியார் துறைகளை ஒருங்கிணைக்கும் புதிய மூலோபாயத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

நுவரெலியா, அனுராதபுரம், மஹியங்கனை மற்றும் கதிர்காமம் போன்ற பகுதிகளில் உள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு, வசதியான சுற்றுலா விடுதிகளாக அபிவிருத்தி செய்வதில் முதலீடு செய்யுமாறு வர்த்தகர்களுக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி, இது தொடர்பாக விரைவில் முறையான திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

சுற்றுலாத் துறையில் தற்போது நிலவும் குறைபாடுகள் மற்றும் சவால்கள் குறித்து வர்த்தகர்களினால் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கான பரிந்துரைகளை முன்வைக்குமாறு ஜனாதிபதி வர்த்தகர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இந்த சந்திப்பில், நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரஸல் அப்பொன்சு, இலங்கை சுற்றுலா அபிவிருத்திஅதிகாரசபையின் தலைவர் புத்திக ஹேவாவசம், ஏற்றுமதி அபிவிருத்தி சபைத் தலைவர் மங்கள விஜேசிங்க மற்றும் தனியார் துறை வர்த்தகர்கள் மற்றும் தரப்பினர்கள் குழு பங்கேற்றனர்.














# அடுத்த வருடம் முதல் பரீட்சைகளை உரிய காலத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு

2026ஆம் ஆண்டு முதல் கல்வி பொதுத்தராதர சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகளை உரிய கால அட்டவணையில் நடத்துவற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்ற கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடலில் போது இது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வியை உறுதிப்படுத்தும் வகையில் எமது நாட்டின் பாடசாலை கட்டமைப்பை முறைமைப்படுத்துதல் மற்றும் பாடத்திட்ட சீர்திருத்தம் ஆகியவற்றில் கவனம் செலுத்துமாறும், ஒவ்வொரு மாணவருக்கும் தரமான கல்வியை உறுதி செய்யும் வகையில், அரசாங்கத்தின் கல்வி சீர்திருத்தங்களின் விரும்பிய இலக்குகளை அடைய தேவையான முதலீடுகளைச் செய்யுமாறும் கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவுறுத்தினார்.

நாடு முழுவதும் பரந்து காணப்படும் தொழிற்கல்வி திட்டங்களுக்குப் பதிலாக, கல்வி அமைச்சின் தொழிற்கல்வி பிரிவின் தலையீட்டின் மூலம் ஒரு தேசிய தொழிற்கல்வித் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகிய 03 துறைகளின் கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கு 2025 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் எழுந்துள்ள பிரச்சினைகள் மற்றும் சவால்கள் குறித்து இதன்போது தனித்தனியாக ஆராயப்பட்டது.

“இலங்கைஅடையாளத்தைப்பகிர்ந்து கொள்ளும் திறமையான பிரஜைகள் மூலம் உலகளாவிய சமூகத்தில் தலைசிறந்த நிலையை அடைதல்” என்ற தொலைநோக்கு பார்வையின் கீழ் கல்வி அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் இதன் போது விரிவாகக் கவனம் செலுத்தப்பட்டது.

வெளிநாட்டு உதவியின் கீழ் பாடசாலைக் கட்டமைப்பில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டது. பொதுக் கல்வி நவீனமயமாக்கல் திட்டம், இரண்டாம் நிலைக் கல்வித் துறை அபிவிருத்தித் திட்டம் போன்ற திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் கல்வி அமைச்சின் அதிகாரிகள் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்தனர்.

நீண்ட காலமாக பாடாசலைகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஆரம்பப் பாடசாலை அபிவிருத்தி உள்ளிட்ட பாடசாலை அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தினார்.

பாடசாலை போசாக்கு உணவுத் திட்டம், புலமைப்பரிசில், பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகள், சுரக்ஷா காப்புறுதித் திட்டம், பின்தங்கிய பாடாசலைகள் மற்றும் பிரிவேனாக்களின் மாணவர்களுக்கு காலணிகள் வழங்குதல், பெண் மாணவர்களுக்கு சுகாதார நப்கின்கள் வழங்குதல், தொழில்நுட்ப பாட புலமைப் பரிசில் திட்டம், “சுஜாத தியனி” புலமைப்பரிசில் திட்டம் மற்றும் “சுபக” புலமைப்பரிசில் திட்டம் போன்ற நலன்புரித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அடுத்த ஆண்டு முதல் க.பொ.த சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகளைதிட்டமிட்டபடிநடத்தஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

2026 ஜனவரி 05ஆம் திகதி புதிய பாடசாலை தவணை தொடங்குவதற்கு முன்பு பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகளை வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

உயர்கல்வித் துறையின் கீழ் செயல்படுத்தப்படும்திட்டங்கள்குறித்தும்விரிவாக ஆராயப்பட்டது. இந்த ஆண்டு நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களில் தொடங்கப்பட்ட புதிய நிர்மாணப்பணிகள் குறித்தும் தனித்தனியாக ஆராயப்பட்டது.

அடுத்த ஆண்டு, பல்கலைக்கழக மாணவர்களின் விடுதி வசதிகளை விரிவுபடுத்துதல், வசதியான கற்றல் சூழலை உருவாக்க பல்கலைக்கழகங்களின் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதன் மூலம் பல்கலைக்கழகங்களை சர்வதேச தரவரிசையில் முதலிடத்திற்கு உயர்த்துதல் மற்றும் புதிய கல்வி சீர்திருத்தங்களுக்கு ஏற்ப பட்டப் படிப்பு திட்டங்கள் மற்றும் பாடத்திட்டங்களை மீளாய்வு செய்வதன் மூலம் புதிய கல்வித் திட்டங்களைத் தயாரிப்பதாக இதன்போது அதிகாரிகள் தெளிவுபடுத்தினர்.

தொழில் கல்வித் துறையை நெறிப்படுத்த செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. 2026-2030 காலகட்டத்தில் 50 தொழிற்பயிற்சி நிறுவனங்களை நவீனமயமாக்குதல் மற்றும் 09 திறன் மையங்களை உருவாக்குதல் உள்ளிட்ட திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டன.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தொடரும் குற்றம்

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினம் இன்று - ஒகஸ்ட் 30 - ஆகும்.

கொடூரமான முறைகளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலைமையை வெளிப்படுத்தவும், எதிர்ப்புகளை அடக்குவதற்காகப் பல சமயங்களிலும் பயன்படுத்தப்படும் இந்த வலிந்து காணாமலாக்கும் நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் அன்புக்குரியவர்கள் மீது ஏற்படுத்தும் கடுமையான துன்ப, துயரங்கள் குறித்து கவனத்தை ஈர்ப்பதற்கும், ஆண்டுதோறும் ஒகஸ்ட் 30 ஆம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை ஆதரிப்பதற்கும், நீதி மற்றும் உண்மைக்காக வாதிடுவதற்கும், வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்காக அது தொடர்பான அனைத்து சர்வதேச நடைமுறைகளையும் ஏற்று, அங்கீகரித்து, தவறாது முழு அளவில் பின்பற்றுமாறு அரசுக் கட்டமைப்புகள் அனைத்தையும் வலியுறுத்தவும், வலிந்து காணாமலாக்கல் என்ற கொடூரக் குற்றத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் இந்த சர்வதேச தினம் ஒரு நினைவூட்டலாக அமைகின்றது.

வலிந்து காணாமலாக்கப்பட்ட குற்றம் என்றோ ஒரு நாள் - எத்தனையோ வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் - இழைக்கப்பட்டிருந்தாலும், அது அன்றே, அப்போதே, முடிவுற்ற ஒரு குற்றமாக அடங்கி விடாது. அப்படி வலிந்து காணாமலாக்கப்பட்டவருக்கு நேர்ந்த கதி தெரியாமல் அல்லறும் உறவுகளின் நிலைமை தொடர் அவலமாக நீடிப்பது போல, இந்தக் குற்றமும் தொடராக நீடிக்கும் ஒன்றே என்பதுதான் அர்த்தம். வலிந்து காணாமலாக்கிய அந்தக் கொடூரக் குற்றம் தொடர்பில் நியாயம் கிட்டாமல் - பொறுப்புக் கூறல் நடைமுறைப்படுத்தப்படாமல் - நீதி நிலைநாட்டப்படாமல் - தொடரும் காலமெல்லாம் அந்தக் குற்றமும் தொடர்ந்து இழைக்கப்படுவதாகவே கருத்து.

இலங்கையில் யுத்தம் முடிந்து 16 ஆண்டுகள் கடந்துவிட்டன. யுத்தத்தின் இறுதிக் கட்டத்திலும் அதன் பின்னரான சொற்ப மாதங்களிலும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் விடயத்தில் நீதி நிலைநாட்டப்படவில்லை. பொறுப்புக் கூறல் நடைமுறைப்படுத்தப்படவில்லை. உண்மை கண்டறியப்படவில்லை. குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை.

இத்தகைய சூழ்நிலையில் இப்படி வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான குற்றங்களை 16 ஆண்டுகளுக்கு முன்னர் இழைக்கப்பட்ட விடயமாக கருதி ஒதுக்கிவிட முடியாது. உண்மைகள் கண்டறியப்பட்டு, உரியவர்கள் தண்டிக்கப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்படும் வரை இந்தக் குற்றம் - வலிந்து காணாமலாக்கிய கொடூரம் - தொடர்ந்து இழைக்கப்பட்டுக் கொண்டிருப்பதாகவே கவனிக்கப்பட வேண்டும். அதுதான் இக்குற்றத்தின் மோசமான விளைவின் அடிப்படை.

ஆக, இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்ட பல்லாயிரம் தமிழர்கள் தொடர்பான விடயத்தில், உண்மையை பௌத்த - சிங்கள ஆட்சியாளர்கள் வெளிக்கொண்டுவரும் வரை, அந்தக் குற்றம் அந்தத் தரப்பினரால் தொடர்ந்து இழைக்கப்பட்டுக் கொண்டிருப்பதாகவே அர்த்தம். அதனை சிங்கள - பௌத்த ஆட்சிப் பீடம் நேரத்துடன் புரிந்து கொள்ள வேண்டும்.

# அமெரிக்க வரி விதிப்பால் கப்பலில் அனுப்பப்பட்ட 500 தொன் கடல் உணவு நடுவழியில் திரும்புகிறது



அமெரிக்காவின் 50 சதவீத வரி விதிப்பால் அந்நாட்டுக்கு கப்பல் மூலம் அனுப்பப்பட்ட 500 தொன் கடல் உணவு நடுவழியில் திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதாக தமிழ்நாடு கடல் உணவு ஏற்றுமதியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இந்திய கடல் உணவு ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தமிழ்நாடு தலைவர் செல்வின் பிரபு தூத்துக்குடியில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"இந்திய பொருள்களுக்கு அமெரிக்கா 50 சதவீதம் வரி விதித்துள்ளது. இந்த வரி விதிப்பால் இந்திய ஏற்றுமதி பெருமளவு பாதிக்கப்படும். அமெரிக்காவுக்கு ஆண்டுக்கு சுமார் 24 ஆயிரம் கோடி ரூபா கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்த வர்த்தகத்தை ஒரே இரவில் நிறுத்தும் செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவுக்கு இறால் மீன் ஏற்றுமதி அதிகம் நடைபெறுகிறது. இந்த வரி விதிப்பால் இறால் ஏற்றுமதியில் நாம் போட்டியை இழந்து விடுவோம். நமக்கு 50 சதவீதம் வரி என்று இருக்கும் போது, நமது போட்டி நாடான இந்தோனேசியா, ஈக்குவடார் மற்றும் இதர நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு 17, 18 சதவீதம் வரிதான் உள்ளது.

இந்திய இறாலின் விலை அமெரிக்க சந்தையில் கூடுவதால் அமெரிக்காவில் இந்திய இறால் வாங்கும் வியாபாரிகள் அனைவரும் தங்களின் முற்பதிவுகளை நிறுத்தியுள்ளனர். சமீபத்தில் நாங்கள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்த கொள்கலன்கள் பாதி தூரம் சென்ற நிலையில், அந்த கொள்கலன்களை அனுப்ப வேண்டாம், திரும்ப பெற்றுக் கொள்ளுங்கள் என்று அமெரிக்க இறக்குமதியாளர்களிடம் இருந்து எங்களுக்கு தகவல் வந்துள்ளது.

இதை மீறி அமெரிக்காவுக்கு இறால் மீன் வந்தால் அதை நாங்கள் எடுக்க மாட்டோம். எனவே பாதி வழியிலேயே எல்லா கண்டெய்னர்களையும் திருப்பிக் கொண்டு செல்லுங்கள் என்று வலியுறுத்துகின்றனர். இல்லையென்றால் இந்த 50 சதவீதம் வரியை ஏற்றுமதி செய்யும் நீங்களே கட்டுங்கள், நாங்கள் கட்ட மாட்டோம் என்று கூறுகின்றனர்.

இந்திய கடல் உணவு ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தமிழ்நாடு தலைவர் செல்வின் பிரபு இறால் மீன் தொழில் ஏற்கனவே நலிந்த நிலையில் தான் இருக்கிறது. இதில் 50 சதவீதம் வரியை தாங்குவது என்பது ஏற்றுமதியாளர்களால் முடியாத காரியம். இதனால் அமெரிக்காவுடனான வர்த்தகத்தை முழுமையாக நிறுத்தக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் இருந்து ஏற்றுமதியான சுமார் 50 கோடி ரூபா முதல் 60 கோடி ரூபா மதிப்பிலான 500 தொன் சரக்குகள் திரும்பி வர வாய்ப்பு உள்ளது.

கடல் உணவு ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் சார்பாக மத்திய அரசிடம் சில கோரிக்கை விடுத்துள்ளோம். அவர்கள் பரிசீலிப்பதாக எங்களுக்கு வாக்குறுதி கொடுத்துள்ளனர். மானிய விலையில் பல்வேறு பொருளாதார உதவிகள், குறைந்த வட்டியில் வங்கிக் கடன் வழங்க வேண்டும் என்று கூறியுள்ளோம். அமெரிக்காவுடன் பேசி 50 சதவீதம் வரியை நீக்கினால் உதவியாக இருக்கும்.

அமெரிக்காஉலகிலேயேபெரியபொருளாதார நாடு. இந்த பொருளாதாரத்தை சார்ந்து நாங்கள் 20 ஆண்டுகளாக பயணித்துள்ளோம். உடனடியாக எங்களின் இறால் சந்தையை வேற நாடுகளுக்கு மாற்றுவதற்கு நீண்ட நாட்கள் ஆகும். ஏற்கெனவே இறால் உணவை மற்ற நாட்டு சந்தைகளுக்கும் அனுப்பிக் கொண்டு தான் இருக்கிறோம். மேலும் அந்த நாட்டுக்கே இறால் மீன்களை கொடுக்கும் போது விலை அதிகம் குறையும். இந்த சூழ்நிலை வந்தால் மீனவர்களும், பண்ணை விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள்.

நாங்கள் மீனவர்களிடமோ, இறால் பண்ணை விவசாயிகளிடமோ கூடுதலாக விலை கொடுத்து இறால் மீன் வாங்க முடியாது. இதனால் இறால் பண்ணை விவசாயிகள் தற்போது இறால் உற்பத்தியை குறைத்துள்ளனர். அமெரிக்காவில் தான் பெரிய அளவுடைய இறால் வாங்குவார்கள். மற்ற நாடுகளில் சிறிய அளவிலான இறால் தான் வாங்குவார்கள்.

பெரிய இறால் வளர்த்தால்தான் விவசாயிகளுக்கு, மீனவர்களுக்கு லாபம் கிடைக்கும். சிறிய அளவிலான இறால்களை வளர்க்கும் போது அவர்களுக்கும் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது. இதே போன்று கடல் மீன் உணவு ஏற்றுமதி நிறுவனத்தில் பணியாற்றும் 50 முதல் 60 சதவீதம் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது." என்று தெரிவித்துள்ளார்.

# இந்திய வளர்ச்சிப் பயணத்தில் ஜப்பான் ஒரு முக்கிய பங்காளி

## பிரதமர் மோடி தெரிவிப்பு



இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் ஜப்பான் எப்போதும் ஒரு முக்கிய பங்காளியாக உள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜப்பான் சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி டோக்கியோவில் நடைபெற்ற இந்திய - ஜப்பான் பொருளாதார மன்றத்தில் உரை நிகழ்த்தினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் ஜப்பான் எப்போதும் ஒரு முக்கிய பங்காளியாக இருந்து வருகிறது. மெட்ரோ ரயில் முதல் உற்பத்தி வரை, குறைக்கடத்திகள் முதல் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் வரை, ஒவ்வொரு துறையிலும் நமது கூட்டாண்மை பரஸ்பர நம்பிக்கையின் அடையாளமாக மாறியுள்ளன.

ஜப்பானிய நிறுவனங்கள் இந்தியாவில் 40 பில்லியன் டாலருக்கும் அதிகமாக முதலீடு செய்துள்ளன. கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 30 பில்லியன் டாலர் தனியார் முதலீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 11 ஆண்டுகளில் இந்தியா அடைந்துள்ள மாற்றத்தை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். இன்று, இந்தியாவில் அரசியல் ஸ்திரத்தன்மை, பொருளாதார ஸ்திரத்தன்மை, கொள்கைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் கணிக்கக்கூடிய தன்மை உள்ளது.

இன்று இந்தியா உலகின் வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதாரமாக உள்ளது. மேலும், மிக விரைவில் அது உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறப் போகிறது. 2017 ஆம் ஆண்டில், நாங்கள் ஒரே நாடு, ஒரே வரியை அறிமுகப்படுத்தினோம். இப்போது, இன்னும் பெரிய சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சில வாரங்களுக்கு முன்பு, எங்கள் நாடாளுமன்றம் எளிமைப்படுத்தப்பட்ட வருமான வரி முறையை அங்கீகரித்தது. அதோடு எங்கள் சீர்திருத்தங்கள் வரிவிதிப்பைத் தாண்டி வெகு தொலைவில் உள்ளன. வணிகம் செய்வதை எளிதாக்குவதை நாங்கள் வலியுறுத்துகிறோம். வணிகத்திற்கான ஒற்றை டிஜிட்டல் சாளர ஒப்புதலை நாங்கள் வழங்கியுள்ளோம்.

இந்தியாவில், பாதுகாப்பு, விண்வெளி போன்ற முக்கியமான துறைகள் ஏற்கனவே தனியார் துறைக்கு திறந்து விடப்பட்டுள்ளன. இப்போது நாங்கள் அணுசக்தித் துறையையும் திறந்து விடுகிறோம். இந்த சீர்திருத்தங்களுக்குப் பின்னால் வளர்ச்சி அடைந்த பாரதத்தை கட்டமைக்க வேண்டும் என்ற எங்கள் உறுதிப்பாடு உள்ளது.

உலகம் இன்று இந்தியாவை வெறுமனே பார்க்கவில்லை, இந்தியாவை உற்று நோக்குகிறது. இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்தங்களை உலகம் அங்கீகரித்தது மட்டுமல்லாமல், பாராட்டவும் செய்துள்ளது." என்று தெரிவித்தார்.



# உக்ரைன் உளவு கப்பல் மீது ரஷ்யா ட்ரோன் தாக்குதல்

உக்ரைன் கடற்படையின் உளவுக் கப்பலான சிம்ஃபெரோபோல் கடற்படை கப்பல் ட்ரோன் தாக்குதலில் மூழ்கடிக்கப் பட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்தது.

ரேடியோ, எலக்ட்ரானிக், ரேடார் மற்றும் ஆப்டிகல் உளவுத்துறைக்காக வடிவமைக்கப்பட்ட லகுனா - வகுப்பு, நடுத்தர அளவிலான கப்பல், டானூப் நதியின் டெல்டாவில் தாக்கப்பட்டது. அதன் ஒரு பகுதி உக்ரேனின் ஒடெசா பிராந்தியத்தில் உள்ளது என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு அறிக்கை தெரிவித்துள்ளது.

உக்ரைன் அதிகாரிகளும் கப்பல் தாக்கப்பட்டதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலில் ஒரு பணியாளர் கொல்லப்பட்டதோடு, பலர் காயமடைந்தனர் என உக்ரைன் கடற்படை செய்தித் தொடர்பாளர் ஒருவரை மேற்கோள் காட்டி கீவ் இன்டிபென்டன்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

2019 இல் சிம்ஃபெரோபோல் கப்பல் தனது செயல்பாட்டை ஆரம்பித்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் உக்ரைன் கடற்படையில் இணைந்தது.

# தாய்லாந்து பிரதமரை பதவி நீக்கிய நீதிமன்றம்



தாய்லாந்து பிரதமரை அந்நாட்டு அரசமைப்பு நீதிமன்றம் பதவி நீக்கம் செய்துள்ளது.

தாய்லாந்தின் அரசமைப்பு நீதிமன்றம் அந்நாட்டின் பிரதமர் பீடோங்டர்ன் ஷினவத்ராவை பதவியில் இருந்து நீக்க உத்தரவிட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னாள் கம்போடிய ஜனாதிபதியுடன் பிரதமர் நடத்திய தொலைபேசி உரையாடல் குறித்த தகவல் வெளியானதையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இச் சம்பவம் அரசமைப்பிற்கு விரோதமானது என்று முடிவு செய்த பின்னர், நீதிமன்றம் அவரை பதவியில் இருந்து நீக்க உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.









# மத்திய வங்கியின் 75 ஆவது ஆண்டு நிறைவு; புதிய நாணய தாள் ஜனாதிபதியிடம் கையளிப்பு

இலங்கை மத்திய வங்கியின் 75 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் வெளியிடப்பட்ட 2000 ரூபாய் புதிய நினைவு நாணயத் தாள், மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவினால் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது.

புழக்கத்திற்கான நினைவு நாணயத் தாளாக இது வெளியிடப்பட்டுள்ளதுடன், இந்த நாணயத்தாள் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட 5 ஆவது நினைவு நாணயத்தாள் ஆகும்.

தேசிய அபிவிருத்திக்கான அடித் தளமாக பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கான மத்திய வங்கியின் தொடர்ச்சியானஅர்ப்பணிப்பைபிரதிபலிக்கும் வகையில், “சுபீட்சத்திற்கான ஸ்திரத்தன்மை“ என்ற ஆண்டு நிறைவு தொனிப்பொருளுக்கு ஏற்ப இந்த நாணயத்தாள் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட பிரதி ஆளுநர் கே.எம்.ஏ.என். தெளலகல, உதவி ஆளுநர் கே.ஜி.பி. சிறிகுமார, நாணயத் திணைக்களத்தின் ஆளுநர் பீ.டீ.ஆர். தயானந்த ஆகியோரும் கலந்து கொண்டனர்.









# முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுடன் கடற்றொழில் அமைச்சர் கலந்தாய்வு

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கும் கடற்றொழில் அமைச்சருக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்றையதினம் மாலை முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் பல்வேறு பிரச்சினைகளைக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கேட்டறிந்து கொண்டமையுடன் சட்ட விரோத மீன்பிடி முற்றந்த் தடைசெய்யப்படும் எனவும் உறுதியளித்தார்.

சட்டவிரோத மீன்பிடியை தடுக்கும் வகையில் விசேட செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நீண்ட நாள்களாக முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் சட்ட விரோத மீன்பிடியை தடைசெய்யக் கோரி ஆர்ப்பாட்டம் செய்தமையுடன் மாவட்ட அசாங்க அதிபரைச் சந்தித்து மகஜரும் கையளித்திருந்தனர்.

இவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மீன்பிடி அமைச்சரை மாவட்ட செயலகத்திற்கு வரவழைத்து மீனவர்களுக்கும் அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பினை மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் ஏற்பாடு செய்திருந்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரும் கூட்டுறவு பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான திலகநாதன்,ஜெகதீஸ்வரன், ரவிகரன், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள், மீனவ சமாசங்களின் உறுப்பினர்கள், மீனவ சம்மேளனத்தின் தலைவர்கள் முதலானோர் கலந்துகொண்டனர்.















# கேப்பாப்புலவில் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட காணியை மீண்டும் பிடுங்கி ஆக்கிரமிக்க விமானப்படை எத்தனம்!

## அதற்குக் கடுமையான எதிரப்பு வெளியிட்ட ரவிகரன் எம்.பி.



(பா.சதீசன்)

முல்லைத்தீவு – கேப்பாப்பிலவில் அமைந்துள்ள அரை ஹெக்டயர் மக்களின்விவசாயக்காணிகளைதமதுதேவைக்கென வழங்குமாறு கேப்பாப்புலவு விமானப்படையினர் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவில் கோரினர்.

ஆனால், கேப்பாப்பிலவில் ஏற்கனவே படையினரால் மக்களின் காணிகள் பல அபகரிக்கப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டிய வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், விமானப்படையினரின் இக்கோரிக்கைக்கு தமது கடுமையான எதிர்ப்பையும் வெளியிட்டார்ர்.

அதனையடுத்து விமானப்படையினருக்கு காணியை வழங்குவதில்லை என நேற்று இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில் –

படையினரால் ஏற்கனவே ஆக்கிரமித்திருந்த இந்தக் காணி விடுவிப்புச் செய்யப்பட்ட நிலையில், அக்காணியில் மக்கள் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். அந்தக்காணியினை விமானப்படை தமக்குத்தருமாறு மீண்டும் கோருவது பொருத்தமற்ற செயற்பாடாகும்.

அத்தோடு இன்னும் 190ஏக்கர் அளவில் மக்களுக்குரிய காணிகள் கேப்பாப்பிலவில் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன. இந்நிலையில் தமது காணிகளை விடுவிக்கவேண்டுமென கேப்பாப்புலவு மக்கள் தொடர்ந்து போராடியும், கோரிக்கைகளை முன்வைத்தும் வருகின்றனர்.

இவ்வாறிருக்க விமானப்படையினர் விடுவிக்கப்பட்ட மக்களின் காணியினை மீண்டும் கோருவது வேடிக்கையாகவுள்ளது.

யுத்தம் மௌனிக்கப்பட்டு ஒன்றரைத் தசாப்தகாலத்திற்கு மேலாகியுள்ள நிலையில் மக்களின் காணிகளை அபகரித்து இங்கிருந்துகொண்டு விமானப்படையினர் யாருடன் யுத்தம் செய்யப்போகின்றனர்?

எனவே கேப்பாப்புலவு மக்களின் விவசாயக் காணிகளை விமானப்படைக்கு வழங்குவதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது. – என இதன்போது தனது கடுமையான எதிர்ப்பை அவர் வெளியிட்டார்.

இதனையடுத்து விமானப்படையினருக்கு காணி வழங்குவதில்லை என முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# யாழ். நூலகத்திற்கு ஜனாதிபதி வருகை

# மாநகர முதல்வருக்கு அழைப்பில்லை!

(என்.புவியரசன்)

யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா மாநகர சபையின் பிரதான நூலகத்திற்கு வருகை தரும் அதே நேரம் நூலகத்தில் இடம்பெறும் எந்த நிகழ்விற்கும் மாநகர முதல்வருக்கு அழைப்பு இல்லை எனத் தெரிய வருகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு நாளை மறுதினம் வருகை தரும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா மாவட்டச் செயலகத்தில் கடவுச் சீட்டு அலுவலகத் திறப்பு, மண்டைதீவில் சர்வதேச துடுப்பாட்ட மைதான அடிக்கல் நாட்டல் போன்றவற்றுடன் மாநகர சபையின் பிரதான நூலகத்தில் ஒரு நிகழ்வு உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கு கொள்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி பங்கு பற்றும் நிகழ்வுகள் தொடர்பான ஏற்





பாட்டுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளரின் ஏற்பாட்டில் கடந்த 20225-08-25 அன்று இடம்பெற்றபோது மாநகர சபையில் இருந்து ஆணையாளர் மற்றும் நூலகர் ஆகியோரை மட்டுமே மாவட்டச் செயலாளர் எழுத்து மூலமாக அழைத்திருந்தார். மாநகர முதல்வரை அழைக்கவோ அல்லது ஜனாதிபதியின் வருகை தொடர்பில் அவருக்கு அறிவிக்கவோ இல்லை எனத் தற்போது தெரிய வந்துள்ளது.

மாவட்டச் செயலகம் புறக்கணித்தமை போன்று ஜனாதிபதி செயலகமும் இன்றுவரை மாநகர முதல்வருக்கு எத்தவொரு அழைப்போ அல்லது அறிவித்தலோ வழங்கவில்லை.

இவற்றின் காரணமாக நாளைய தினம் நூலகத்தில் இடம்பெறும் ஜனாதிபதியின் வருகையின்போது மாநகர ஆணையாளர் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்களும் அரச தரப்பு மாநகர சபை உறுப்பினர்கள் மட்டுமே பங்குகொள்ளக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கிழக்குப் பல்கலை கலை, கலாசார பீட மாணவரும் இன்றைய போராட்டத்துக்கு முழு அளவில் ஆதரவு

## ஒன்றியத் தலைவர் துரையப்பா லக்சன் தெரிவிப்பு



(வாலகிருஸ்ணா)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் ரவீந்திரநாத் கடத்தப்பட்டும், கிழக்குஒ பல்கலைக் கழகத்தில் அகதிகளாகயிருந்த 150க்கும் மேற்பட்டோர் கொண்டுசெல்லுப்பட்டும் உள்ளனர். அவர்களுக்கி என்ன நடந்தது என்பது இன்று வரையிலும் தெரியாத நிலையில் அதற்காகக் குரல் கொடுக்கவேண்டிய கடப்பாடு தமக்கு உள்ளதாக கிழக்கு பல்கலைக்கழக கலை கலாச்சார பீட மாணவர் ஒன்றியத் தலைவர் துரையப்பா லக்சன் தெரிவித்தார்.

கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீட மாணவர்களின் ஊடகவியலாளர் சந்திப்பு மட்டு.ஊடக அமையத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர் கூறியவை வருமாறு:-

ஒவ்வொரு வருடமும் ஓகஸ்ட் 30 ஆம் திகதி வந்தால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டம் நடத்துவது வழமையான ஒன்றாக மாறியிருக்கின்றது. ஆனால் இதுவரைக்கும் அதற்கான தீர்வுகள் தமிழ் மக்களுக்குக் கிடைக்கப் பெறவில்லை. அந்த அடிப்படையில் நாளைய (இன்றைய) தினமும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் மூலமாக கிழக்கு மாகாணத்திலும் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட இருக்கின்றது.

கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் என்கின்ற அடிப்படையில் எமது குரலையும் அந்த போராட்டத்தில் இணைக்க வேண்டும் என்பது எங்களது உரிமையாகவும் முக்கிய கடமையாகவும் இருக்கின்றது. காரணம் அனைவருக்கும் தெரியும். 2006 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதி எமது முன்னாள் உப வேந்தர் கொழும்பு விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தில் உரை நிகழ்த்தி விட்டு வரும்போது அவர் காணாமல் ஆக்கப்பட்டார். இன்று வரைக்கும் அதற்கான தீர்வு கிடைக்கப்பெறவில்லை. அவர் உயிருடன் இருக்கின்றாரா, இல்லையா என்கின்ற தகவல் கூட யாருக்கும் கிடைக்கப்பெறவில்லை.

அதேபோன்று 1990 ஆம் ஆண்டு காலகட்டத்தில் கிழக்கு பல்கலைக்கழகத்தில் அகதி முகாம்களில் வைக்கப்பட்டிருந்த 150 நபர்கள் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டார்கள். அவர்களது இருப்பும் இன்று வரை உறுதி செய்யப்படாத ஒன்றாகத்தான் இருந்து வருகிறது. இவ்வாறு பலர் வடக்குக் கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டு இப்போது வரை எந்தவிதமான முடிவுகளும் தெரியாத சூழ்நிலையில் அதற்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் தமிழ் சமுதாயமும் இளைஞர் சமுதாயமும் இருந்து வருகின்றன.

இந்தப் போராட்டத்தில் அனைத்து தமிழர்களும் நமது உறவினர்களுக்காக குரல் கொடுப்பதற்காகவும் அதற்கான தீர்வையும் நமக்கான நியாயத்தையும் பெற்றுக் கொள்வதற்காக ஒன்று கூடுமாறு கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசசார பீடமானவர் சார்பாகவும் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம். - என்றார்.



# சிறுவர்களின் பாதுகாப்பை வலியுறுத்தும் தொனிப்பொருளில் வவுனியாவில் பேரணி

**(கி.வசந்தன்)**

சிறுவர்களைப் பாதுகாப்போம், சிறுவர்களிற்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க ஒன்றாகத் திரள்வோம் எனும் தொனிப்பொருளில் வவுனியாவில் பேரணி ஒன்று நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டது.

நெகோமியா அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டின் கீழ் இலங்கை திருச்சபை திருக்கலவன் பாடசாலைக்கு அருகில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணி, ஏ9 வீதியின் ஊடாக வவுனியா பழைய பஸ் நிலையத்தில் நிறைவடைந்தது.

பொதுமக்கள், சிறார்கள் என பலரும் கலந்து கொண்ட இப்பேரணியில், "நாம் மென்மையானவர்கள், எம்மீது வன்மத்தை தீர்க்காதீர்கள்!", "என்னை மற்றவர்களின் திறமைகளோடு ஒப்பிடா தீர்கள்!" போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியவாறு சிறுவர்கள் பேரணியில் சென்றனர்.












# தம்பிலுவில் பொது மயானத்தை அண்டிய பகுதிகளில் மீண்டும் இரண்டாம் நாள் அகழ்வுப் பணி முன்னெடுப்பு

## எனினும் சான்றுப் பொருள்கள் எதுவும் கிட்டவில்லை














**(பாறுக் ஷிஹான்)**

கருணா – பிள்ளையான் குழு முக்கியஸ்தர் இனிய பாரதியின் மற்றுமொரு சகாவின் வாக்குமூலத்தின் அடிப்படையில் நேற்று மதியம் முதல் அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பிலுவில் மயானத்தை அண்டிய பகுதிகளில் மீண்டும் 2 ஆம் கட்ட அகழ்வு பணிகள் இரண்டாம் நாளில் முன்னெடுக்கப்பட்டன.

அக்கரைப்பற்று மேலதிக நீதிவான் திருமதி தெசீபா ரஜீவன் முன்னிலையில் 3 ஜேசிபி இயந்திரங்கள் மூலம் பல்வேறு அடையாளம் காணப்பட்ட இடங்களில் அகழும் பணி நிறைவடைந்தது.

கடந்த 2005 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து இனிய பாரதியின் முக்கிய சகாவாக செயற்பட்ட அம்பாறை மாவட்டம் காரைதீவு பகுதியை சேர்ந்த சந்தேக நபர் அந்தப் பகுதிக்கு கைவிலங்கிடப்பட்டு அழைத்து வரப்பட்டிருந்தார்.

அவர் கடந்த காலங்களில் திருக்கோவில் பகுதியில் தனியார் தொலைத்தொடர்பு சிம் விற்பனை முகவராக செயற்பட்ட அருளானந்தன் சீலன் என்பவரைக் கடத்தி படுகொலை செய்து குறித்த இடத்தில் புதைத்திருப்பதாக அரச சாட்சியாக மாறி குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.

அவரின் தகவலின் பேரில் நேற்று முன்தினமும் நேற்றும் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

எனினும் இரண்டாவது நாளிலும் எதுவித சான்று பொருள்களும் அங்கு கிடைக்கப்பெறவில்லை.இதனால் இந்த அகழ்வு பணிகள் இடைநிறுத்தப்பட்டு நீதிவானின் உத்தரவிற்கமைய நிறைவு செய்யப்பட்டது.

எனினும் இன்று அகழ்வு பணி 3 ஆம் நாளாக முன்னெடுக்கப்படுமா என்பது குறித்து இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

# காணாமலாக்கப்பட்டோருக்காக சர்வதேச நீதி கோரும் போராட்டத்திற்கு வலி. கிழக்குப் பிரதேச சபை ஆதரவு

## தவிசாளர் நிரோஷ் அறிவிப்பு

இனப்படுகொலையை வெளிப்படுத்தி சர்வதேச நீதிகோரும் போராட்டங்கள் சகலவற்றையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை வரவேற்பதுடன் அவற்றிற்கு எமது ஆதரவினைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

நேற்றைய தினம் தமிழ்த் தேசிய கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து யாழ். நகரில் மேற்கொண்ட இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி கோரிய கையெழுத்துப் போராட்டத்தில் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது இனத்தின் மீது நாட்டின் ஆட்சியாளர்களினால் திட்டமிட்ட இனப்படுகொலையே நடத்தப்பட்டது. இந்த இனப்படுகொலையில் திட்டமிட்ட படுகொலைகள், வலிந்துகாணாமலாக்கப்பட்ட சம்பவங்கள், இடம்பெற்ற பாரதூரமான இன அடிப்படையிலான அரச



பாரபட்சங்கள் என பரந்துள்ளன. இவ்வாரம் தொடர்ந்து இனப்படுகொலைக்கான நீதி கோரிய போராட்டங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இன்றைய தினம் தமிழ்த் தேசிய கட்சிகள் அரசியல் கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒன்றிணைந்து இனப்படுகொலைக்கான கையெழுத்துப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளன.

அதுபோல் நாள. (இன்று) வடக்குக் கிழக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினத்தை மையப்படுத்தி யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பில் போராட்டத்தை நடத்தவுள்ளனர். மேலும் பல்வேறுபட்ட சிவில் அமைப்புக்களும் இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பில் பல்வேறுபட்ட முறைமைகளின் அடிப்படையில் போராட்டங்களை ஆரம்பித்துள்ளன. நடைமுறையில் உள்ள அரசாங்கமும் எமக்குத் தீர் வைத்தரும் என்ற நம்பிக்கை இல்லை. எது, எப்படியிருந்தபோதும் உள்நாட்டில் இடம்பெறும் முழுமையான சர்வதேசத் தலையீடுகள் அற்ற விசாரணைகளோ தீர்வுகளோ தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான உத்திகளே.

அவ்வகையில் தான் எமது சபையில் இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டும் என்ற தீர்மானத்தினை ஏகமனதாக எடுத்துள்ளோம். இந் நிலையில் எமது சபை உத்தியோகபூர்வமாகவே இனப்படுகொலைக்கான சர்வதேச நீதியைக் கேட்டு நிற்கின்றது. - என்றார்.

# வயோதிப மாதுவின் 16 பவுண் தாலிக்கொடியை கழுத்தில் கத்தி வைத்து அறுத்த கொள்ளையன்

## மட்டு ஊறணியில் வீடு ஒன்றில் விடிகாலையில் சம்பவம்






(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஊறணிப் பகுதியில் வீடு ஒன்றில் உள்நுழைந்த கொள்ளையன் ஒருவன் வயோதிப பெண் ஒருவரின் கழுத்தில் கத்தியை வைத்து கழுத்தில் இருந்த 16 பவுண் தாலிக் கொடியை அறுத்துக் கொள்ளையடித்துக் கொண்டு அங்கிருந்த சைக்கிளையும் எடுத்துக் கொண்டு தப்பி ஓடியுள்ளான். வயோதிப பெண் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலையில் இடம் பெற்றுள்ளதாக மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபற்றி தெரியவருவதாவது:-

கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள ஓவசியர் வீதி, சின்ன ஊறணி பகுதியிலுள்ளள வீடு ஒன்றில் தாதியர் உத்தியோகத்தர் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற 65 வயதுடைய வயோதிப பெண்ணும் கணவனும் வாழ்ந்து வருகின்றனர்.



நேற்று முன்தினமான வியாழக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, அறையின் கதவை சாத்திவிட்டு அங்கு இறைவழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அங்கு கதவினை திறந்து ஒருவர் நிற்பதை கண்டு கணவர் என நினைத்து அவரை அழைத்துள்ளார். ஆனால் பதிக் எதுவும் இல்லை.

இதனையடுத்து அறையின் லையிற்றை போட்போது அங்கு அரைக் காற்சட்டையுடன் ஒருவன் அவனது இடுப்பில் இருந்து கத்தி ஒன்றை எடுத்துக்கொண்டு கொண்டு தனது வாயில் கைவிரலை வைத்து, சத்தம்போடாதே என கத்தியை வயோதிப மாதுவின் கழுத்தில் வைத்து மிரட்டி,கழுத்தில் இருந்த 16 பவுண் தாலிக்கொடியை இழுந்து அறுத்து கொண்டு, அவரை கட்டிலில் தள்ளி வீழத்திவிட்டு அங்கிருந்து தப்பி ஓடினான்.

மாது சத்தம் போட்டதையடுத்து கணவர் வந்து காயமடைந்த அவரை வைத்தியசாலையில் சேர்த்தார்.

தப்பி ஓடிய கொள்ளையன் அங்கு நிறுத்தி வைத்திருந்து - ஒரு வாரத்துக்கு முன்னர் வாங்கிய - புதிய சைக்கிளை எடுத்துக் கொண்டு தப்பி ஓடியுள்ளான். அன்றைய தினம் அருகிலுள்ள வீடுகளில் வெளியில் இருந்த தாச்சி, மோட்டார் சைக்கிள் தலைகவசம் என்பவற்றையும் திருடிச் சென்றுள்ளான் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. கொள்ளையனைத் தாங்கள் தேடிவருகின்றனர் எனொ பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நூறு நாள் செயல் முனைவின் 29ஆவது நிகழ்வு மன்னார் பள்ளிமுனை கிராமத்தில் முன்னெடுப்பு









**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் பங்காளர் அமைப்பான பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையம் தனது நூறு நாள் செயல்முனைவு நிகழ்ச்சித்திட்டத்தை நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை மன்னாரில் முன்னெடுத்துள்ளது.

நூறு நாள் செயல் முனைவின் 29 ஆவது நாள் நிகழ்வு மன்னார் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை மன்னார் பள்ளிமுனை கிராமத்தில் முன்னெடுக்கப்பட்டது.

மீள பெற முடியாத வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான அதிகாரப் பரவலாக்கம் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில்,மக்களுக்கு தெளிவூட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது கலந்து கொண்டவர்கள் தமது சந்தேகங்களுக்கான தெளிவையும் பெற்றுக் கொண்டனர்.வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினால் முன் வைக்கப்பட்ட 16 கோரிக்கைகள் குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணைய பிரதிநிதிகள் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நானாட்டான் பிரதான வீதிகளில் பகல்வேளை நடமாடிய யானை!




**(ந.லோகதயாளன்)**

மன்னார் நானாட்டான் பிரதான வீதிகளில் நேற்று முன்தினம் யானை ஒன்று பகல்வேளை நடமாடிய தனால் அப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நானாட்டான் நகரின் மையப் பகுதி வரையில் பகல் 10 மணியளவில் இவ்வாறு யானை ஊடுருவியதனால் நகரிற்கு வருகை தந்த பொது மக்கள் பீதியடைந்து சிதறியோடினர். நானாட்டானிற்கு வருகை தந்த யானை முசலி மக்கள் குடியிருப்பு பகுதியின் ஊடாகவே உள் நுழைந்தது. அப் பகுதியில் இருந்த மக்கள் மட்டுமன்றி பாடசாலை மாணவர்கள் வரையில் பெரும் பரபரப்பு காணப்பட்டது.

நீண்ட முயற்சியின் பின்பு யானை விரட்டப்பட்டது.

யானையின் வால் பகுதி ஏற்கனவே வெட்டப்பட்டு இருப்பதனால் இது ஓர் வளர்ப்பு யானையாக இருந்து காட்டிற்குக் கொண்டு வந்து இறக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

# இன்றைய ராசி பலன்கள் - 30.08.2025




கோவிலுக்கு செல்லுதல் மற்றும் பக்தி ஈடுபாடு இன்று உங்களுக்கு நன்மை அளிக்கும். தியானம் மேற்கொள்வது சிறந்தது.

இன்று பணியில் மூழ்கி இருப்பீர்கள். நீங்கள் செய்யும் பணியில் அறிவாற்றல் பெறுவதன் மூலம் நன்மை விளையும்.

உறவில் பொறுமையை கடைபிடியுங்கள். பெரியவர்களின் ஆலோசனை கேட்பது சிறந்தது.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். பணப் பரிவர்த்தனைகளை சிறப்பான முறையில் ஆவணங்களில் பராமரிக்க வேண்டும்.

தலை வலி மற்றும் உயரமுத்தம் காரணமாக ஆரோக்கியம் சிறிது பாதிக்கப்படும்.




இன்று பிரார்த்தனை சிறந்த பலனளிக்கும். இந்து முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் இது மகிழ்ச்சியான நாளாக இருக்காது. நீங்கள் தவறு செய்ய வாய்ப்புள்ளது. எனவே கவனமாக இருக்கவும்.

குடும்பத்தில் சில குழப்பங்கள் காணப்படும். உங்கள் தனிப்பட்ட விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். சேமிப்பு பழக்கத்தை மேற்கொள்வது சிறந்து.

கண்களில் எரிச்சல் மற்றும் தோள் வலி போன்ற பாதிப்புகள் காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




உங்களுக்கு வளர்ச்சி தரும் பயனுள்ள செயல்களில் பங்கு கொள்ளுங்கள். பங்கு வர்த்தகம் உங்களுக்கு நல்ல லாபம் தரும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். நீங்கள் உங்கள் பணிகளை சிறப்பாக ஆற்றுவீர்கள். பணியில் நற்பெயர் பெறுவீர்கள்.

குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். இன்று உற்சாகத்தையும் காதல் உணர்வையும் அனுபவிப்பீர்கள்.

இன்று ஆன்மீக காரியங்களுக்கும் தொண்டுகள் செய்வதற்கும் பணத்தை செலவு செய்யுங்கள். இது உங்களுக்கு மிகுந்த திருப்தி அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பாரமாரித்து மகிழ்ச்சி யுடன் இருப்பீர்கள்.




உங்கள் அனைத்து முயற்சிகளும் வெற்றியை பெற்றுத் தரும். நீங்கள் அதிக அறிவாற்றலை பெறுவீர்கள்.

உங்களிடம் தொழில் சார்ந்த அணுகுமுறை காணப்படும். இதனால் பணியில் திறம்பட செயலாற்றுவீர்கள். சரியான அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் மகிழ்ச்சியும் வளர்ச்சியும் காணப்படும்.

குடும்பத்தில் இணக்கம் காணப்படும். குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று சாதகமான நிதிநிலை காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள போதிய பணம் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிப்பீர்கள்.




இன்றைய நாள் பரபரப்பாக இருக்கும். யோகா அல்லது தியானம் மேற்கொள்வதன் மூலம் அமைதி மற்றும் நன்மை விளையும்.

இன்று தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்றவும். உங்கள் அறிவுத்திறன் பயன்படுத்தி பணியாற்றவும்.

குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் குறித்த கவலை காணப்படும். இது நல்லுறவிற்கு ஏற்ற நாள் அல்ல.

இன்று பண இழப்பிற்கான சாத்தியம் உள்ளது. பணத்தை எச்சரிக்கையாக கையாளவும்.

இன்று முதுகுவலி மற்றும் தலை வலி பாதிப்பு காணப்படும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று பலன்கள் கலந்து காணப்படும். சில தடைகளைக் கடந்து பணியில் வெற்றி பெறுவீர்கள். இன்று அதிக முயற்சி எடுக்க வேண்டும்.

இன்று விவாதங்கள் ஏற்படும் என்ற காரணத்தால் உங்கள் துணையுடனான உறவு மகிழ்சிகரமாக இருக்காது. நீங்கள் அனுசரித்துப் போவதன் மூலம் நன்மை பெறலாம்.

பண வரவுடன் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் தேவைகளை முன்னுரிமைப் படுத்தி அதன்படி செயலாற்றுங்கள்.

தலை வலியால் இன்று நீங்கள் அவதிப்பட நேரலாம். ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.




உங்கள் தேவை அறிந்து அமைதியாக செயல்படுங்கள். உடனடியாக உங்கள்விளைவுகளுக்குபலன்கிடைக்காவிடில் நம்பிக்கை இழக்காதீர்கள்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது.

உங்கள் உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் வீட்டு பெரியவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்காது. கனிசமான இருப்பை பராமரிக்க தடைகளை எதிர்கொள்வீர்கள்.

பெரியவர்களின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவர்களின் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.




பொதுவாக இன்று சிறப்பான நாள். உங்கள் கடின உழைப்பை நம்புங்கள். உங்கள் நேர்மையான முயற்சி மூலம் உங்களுக்கு வெற்றி கிடைக்கும்.

உங்கள் தன்னம்பிக்கை மற்றும் உறுதி மூலம் தடைகளை சமாளிப்பீர்கள். பனியின் மூலம் நன்மை பெறுவீர்கள்.

உங்களின் பிரியமானவர்களுடன் பேசும் போது கவனமாக உரையாற்றும் திறன் வேண்டும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக உள்ளது. இன்று பணவரவு காணப்படும்.

சூடு சம்பந்தமான பிரச்சினைகள் மற்றும் தோல் பிரச்சினைகள் ஏற்படலாம். சரிவிகித உணவை மே-ற்கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.08.2025




கேளிக்கை மற்றும் பொழுதுபோக்கு நிகழ்சிகள் உங்களுக்கு புத்துணர்ச்சி அளிக்கும். அதிகமாக சிந்திப்பதை தவிர்த்திடுங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சி-கரமாக காணப்படாது என்றாலும் கடவுள் அருளால் தடைகளைத் தாண்டி முன்னேறு வீர்கள்.

உங்கள் உறவில் குழப்பம் நேரலாம். எனவே வேறுபாட்டை களைந்து மகிழ்ச்சியை பராமரிக்கவும்.

நீங்கள் எதிர்பார்த்த வகையில் நிதிநிலைமை காணப்படாது. பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

பதட்டம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும் தோல் எரிச்சல் போன்ற பாதிப்புகளும் ஏற்படலாம்.




இன்று நன்மை விளையும் நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும். சில விருப்பங்கள் இன்று நிறைவேறலாம்.

உங்கள் பணிகளை திறம்பட ஆற்றுவீர்கள். அது உங்கள் மேலதி காரிகளின் கவனத்தை ஈர்க்கும். உங்கள் பணிக்கு அங்கீ காரம் கிடைக்கும்.

உங்கள் உறவில் மகிழ்ச்சியும் நல்ல பிணைப்பும் காணப்படும். குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இந்த நாளை கொண்டாடுவீர்கள்.

இன்று பணம் அதிகமாக காணப்படும். அதனை நீங்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.

இன்று உங்களுக்கு ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது.




உங்கள் தேவையின் முன்னுரிமை அறிந்து அதன்படி செயல்படுங்கள். அதிக பொறுப்புகள் காரணமாக மும்மரமாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் சூழ்நிலை சாதகமாக இருக்காது. தகவல் தொடர்பு குறைபாடு காரணமாக சக பணியாளர்களுடன் அமைதியின்மை காணப்படும்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவு காணப் படாது. தேவையற்ற மோதல்கள் ஏற்பட வாய்ப்புள் ளது.

உங்கள் குடும்பத்திற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரும். தேவையற்ற செலவுகளை கண் காணிக்கவும்.

கால் வலி மற்றும் தலை வலி பாதிப்பு ஏற்படலாம்.




இன்று நீங்கள் அதிக நேரம் செயல்பட வேண்டியிருக்கும். அதிக பொறுப்புகள் காரணமாக இன்று நீங்கள் பணியில் மூழ்கியிருப்பீர்கள்.

பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண் டும். உங்கள் நேரம் மற்றும் ஆற்றலை நன்கு பயன்படுத்த வேண்டும்.

குடும்பத்தில் சூடான விவாதங்கள் காணப்படும். அமைதியும் பொறுமையும் மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

நிதிநிலையில் ஏற்றத்தாழ்வு காணப்படும். இன்று அதிக செலவுகளை எதிர் கொள்ள நேரும்.

அதிக பதற்றம் காரணமாக தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

# இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட 120 கிலோ கஞ்சாப் பொதிகள் சிக்கின

## இரு படகுகளுடன் நால்வர் மாட்டினர்

**(ந.லோகதயாளன்)**

இந்தியாவில் இருந்து படகு வழியாக கடத்தி வரப்பட்ட 120 கிலோ கஞ்சா கடற்படையினரால் நேற்றுக் காலை கைப்பற்றப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இருந்து ஒரு படகில் கஞ்சா கடத்தி வந்த சமயம் படகு பழுதடைந்தமையால், பழுதடைந்த படகை மீட்டுவர மற்றுமோர் படகு சென்றுள்ளது. இவ்வாறு இரண்டாவது படகு சென்று அவற்றை ஏற்றி வரு வதற்கு முன்பு பகல் வேளையான போது கடற்படையினர் கண்டுகொண் டுள்ளனர்.

இதன்போது கஞ்சா கடத்தலிற்கு பயன்படுத்தப்பட்ட இரு படகுகளை யும் அவர்கள் கைப்பற்றினர். கடத்த லில் ஈடுபட்ட நால்வரும் கைது செய் யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப பட்டவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளனர்.

